**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்**

**அ.வ.எண்.222/2024**

**நாள் : 17.04.2026**

**வா.சா.2 – திருவேங்கடசாமி**

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

இவ்வழக்கின் வாதி வீராச்சாமி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் உங்களுக்கு தெரியுமா என்றுசொன்னால் - தெரியும். மேற்கண்ட வாதி தாக்கல் செய்துள்ள சொத்தின் சர்வே எண் என்ன என்று உங்களுக்கு தெரியுமா என்றால் - தெரியாது. தாவா சொத்து ஆதியில் ஆறு ஏக்கர் நிலமாக இருந்தது என்றும், அது சங்கரப்பநாயக்கர், பெருமாள்நாயக்கர் மற்றும் கிருஷ்ணசாமிநாயக்கர் ஆகிய மூவருக்கும் பாத்தியப்பட்டது. மேற்கண்ட மூவருக்கும் இடையே 1944 ம் வருடம் ஒரு பாகப்பிரிவினை நடந்தது என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது. சங்கரப்பநாயக்கர் உங்களுடையா தாத்தா என்றால் - இல்லை, எனது பெரியப்பா ஆவார். உங்களது பெரியப்பா சங்கரப்பநாயக்கருக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் சொத்தை உங்களது தாயார் திருமதி.சீத்தம்மாளுக்கு தானசெட்டில்மென்ட் எழுதப்பட்டது என்றால் - சரிதான். அதேபோல் கிருஷ்ணசாமிநாயக்கருக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் சொத்தை ராதாகிருஷ்ணனுக்கு 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு எழுதிகொடுக்கப்பட்டது என்றால் - சரிதான். பெருமாள்நாயக்கரின் மனைவி வீரம்மாள் என்றுசொன்னால் - சரிதான். பெருமாள்நாயக்கரின் சொத்தை அவரது மனைவி வீரம்மாள்தான் அனுபவித்து வந்தார் என்றுசொன்னால் - சரிதான். மேற்கண்ட வீரம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் வாய்மொழியாக 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் ராதாகிருஷ்ணனுக்கு கொடுத்தார் என்றால் - நிச்சயமாக இல்லை. பொதுவாக சொத்தனாது யாருடைய பெயரில் அனுபவித்தில் இருந்து

வருகிறதோ அவருடைய பெயரில் பட்டா கொடுக்கப்படும் என்றால் - ஒரு சில சமயங்களில் தவறுதலாக கொடுக்கவும் வாய்ப்பிருக்கிறது. மொத்தமாக இருந்த ஆறு ஏக்கர் சொத்தைப் பொறுத்து உங்கள் பெயரில் லோகநாதன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் பெயரில் கூட்டுப்பட்டா இருந்தது என்றுசொன்னால் - கண்டிப்பாக லோகநாதன் பெயரில் கூட்டுப்பட்டா பெறப்பட்டிருக்க வாய்ப்பில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் கூட்டுப்பட்டா எண் 478 லோகநாதன் பெயரில் முக்கியமாக ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. உங்களது அம்மாவிற்கு தானசெட்டில்மென்ட் எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்தை நீங்களும் உங்களுடைய சகோதரர்களும் தற்போதும் அனுபவித்து வருகிறீர்கள் என்றால் - எங்களுக்கு பெயரளவில் பேசி பாகம் ஏற்பட்டுவிட்டது. மூன்று பேரில் உள்ள கூட்டுப்பட்டா உங்கள் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டுவிட்டதா என்றால் - முன்னமே எனது பெயரில்தான் பட்டா இருந்தது. வாதி வீராச்சாமி தாவா சொத்து சம்மந்தமாக RDO மற்றும் DRO -டம் மனு கொடுத்த விவரம் உங்களுக்கு தெரியும் என்றால் - சரிதான். வாதி கொடுத்த மேற்கண்ட RDO மற்றும் DRO மனுவை தள்ளுபடி செய்துவிட்டார்கள் என்றுசொன்னால் - சரிதான், வாய்மொழி கிரையம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்று சொன்னார்கள். வாதி வீராச்சாமி DRO -விடம் கொடுத்த மனு தள்ளுபடி செய்துவிட்ட பிறகு இந்நீதிமன்றத்தில் பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் - சரிதான். நீங்களும், உங்களுடைய சகோதரர்களும் அனுபவித்து வரும் 2 ஏக்கர் நிலத்திற்கு வடக்குபுறம்தான் தாவா சொத்து 2 ஏக்கரும் மற்றும் ஒரு 2 ஏக்கருமாக 4 ஏக்கர் அமைந்துள்ளது என்றுசொன்னால் - சரிதான். மேற்கண்ட 4 ஏக்கர் நிலத்தை 1ம் பிரதிவாதி லோகநாதனும், 2 முதல் 4 பிரதிவாதிகளான ராதாகிருஷ்ணனின் வாரிசுகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றுசொன்னால் - 1ம் பிரதிவாதி லோகநாதன் அனுபவித்து வரவில்லை, என்னுடைய நிலத்திற்கு

வடக்கே வீராச்சாமி அனுபவித்து வரும் நிலமும், அதைத்தாண்டி ராதாகிருஷ்ணனும் அனுபவித்து வருகிறார்கள். நீங்கள் சொல்வது தவறு என்றும், தாவா சொத்து மற்றும் 2 ஏக்கர் உங்கங்ள நிலத்திற்கு வடக்கே உள்ள மொத்தம் 4 ஏக்கர் நிலத்தை 1ம் பிரதிவாதி லோகநாதனும் 2 முதல் 4 பிரதிவாதிகளான ராதாகிருஷ்ணனின் வாரிசுகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றும் தற்போது அவ்விவரங்கள் தெரிந்தே வழக்கிற்காக பொய்சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் - சரியல்ல. நீங்கள் அனுபவித்து வரும் 2 ஏக்கர் நிலத்தைப் பொறுத்து லோகநாதன், ஸ்ரீதரன், தாமோதரன் ஆகிய 1 முதல் 3 பிரதிவாதிகள் இடையூறு செய்கிறார்கள் என்று RDO-விடம் மனு கொடுத்தீர்கள் என்றுசொன்னால் - நான் எந்த மனுவும் கொடுக்கவில்லை. எந்த ஒரு காலக்கட்டத்திலும் தாவா சொத்தான 2 ஏக்கர் நிலத்தை வாதி வீராச்சாமிதான் அனுபவித்து வரவில்லை என்றும், 1 முதல் 4 பிரதிவாதிகளின் அனுபவித்தில்தான் இருந்துவருகிறது என்றுசொன்னால் - அது முற்றிலும் தவறு தாவா சொத்தும், எனது நிலமும் தரிசாகதான் கிடைக்கிறது, மற்ற நிலங்கள் Plot போட்டு விற்றுவிட்டார்கள். தாவா சொத்து 2 ஏக்கர் நிலமும் Plot போடப்பட்டுதான் உள்ளது என்றால் - இல்லை. எனவே வாதி கோரிய பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் - சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**